**நுவரஎலிய மா நகர சபை**
**நுவரஎலிய மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 23 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஜுன் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நுவரஎலிய மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது உதவியாக கிடைத்திருந்த மேலைத்தேய 8 மருந்து வகைகளின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் நன்கொடையாகச் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 284,025 தொகையினை வருமானத்திற்கு எடுக்காமல் வைப்புக்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) நிலுவை இறைச்சிக் கடை வாடகை வழக்கு ஒன்றின் மீது 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 06 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 300,000 தொகையினை வைப்புக் கணக்குகளில் தடுத்து வைத்திருந்தமையால் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் மற்றும் கடன்பட்டோர் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்த ரூபா 1,622,471 தொகைப் பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு மற்றும் விதவைகள் அநாதைகள் நிதியத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 992,624 தொகை பெறுமதியான 09 நடமாடும் மலகூடங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,021,019 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,806,983 ஆகும்.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) மா நகர சபைக் கட்டளைச் சட்டம் | |
| 40(1)ஊ ஆம் பிரிவு | 1985 முதல் 1995 வரை 30 சந்தர்ப்பங்களில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் ஜனாதிபதியின் அங்கீகாரம் இன்றி குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருந்த காணிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 237(1) ஆம் பிரிவு | 2000 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் பின்னர் வருடாந்தப் பெறுமதியை பாதிக்கக் கூடிய பௌதீக ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களின் போது புதிதாக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) 104 | 2015 ஆண்டிற்கான இறுதி வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 423,631 தொகையான பணக் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 371(2) | மீளாய்வாண்டின் போது 19 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 2,226,476 தொகையான முற்பணங்களை 2016 ஜனவரி 20 ஆம் திகதி வரை தீர்த்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 395(இ) மற்றும் 2011 திசெம்பர் 09 ஆந் திகதிய 453 ஆம் இலக்க மற்றும் 2013 ஜனவரி 31 ஆந் திகதிய 02/2013 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2015 மே முதல் திசெம்பர் வரை வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதில் தாமதம் காணப்பட்டது. |

| | |
|---|---|
| (iv) 396(ஈ) | இறுதியாகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 ஜூன் முதல் 2015 பெப்ரவரி வரை வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 139,571 தொகை பெறுமதியான 38 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு | தாபனத் தலைவரின் அங்கீகாரம் இன்றி விடுமுறை நாள் சம்பளத்திற்காக 02 சந்தர்ப்பங்களில் ரூபா 18,376 தொகை செலுத்தியிருக்கவில்லை. |
| (ii) 3 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது சபையின் 4 பிரிவுகளில் 338 பேருக்கான மிகையொன்று காணப்பட்ட போது ரூபா 8,298,955 தொகை மேலதிக நேர வேலைப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | ஓய்வுபெற்றுள்ள இரண்டு உத்தியோத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 112,193 தொகை பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | சேவையை விட்டுச் சென்றுள்ள 34 உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையை விட்டு நீக்கிய 05 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 75,000 தொகை மற்றும் ரூபா 461,623 தொகை என்பன அறவிடப்பட்டிருக்க வில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 102,583,782 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 90,844,014 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 11,739,768 தொகைக்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மிகையில் ரூபா 11,739,768 இனால் அதிகரித்திருந்தமைக்கு 05 வருமான விடயங்களில் அதிகரிப்பு மற்றும் 03 செலவு விடயங்களில் குறைதலும் முக்கிய காரணமாகியிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

நகர ஆணையாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | அறவிடப்பட்ட வேண்டிய முழுத் தொகை | ஆண்டிற்கான அறவீடுகள் சிட்டையிடப் பட்டவை களில் | ஆண்டிற்கான அறவீடுகள் நிலுவையில் | 2015.12.31 திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 64,173,174 | 40,885,552 | 105,058,726 | 21,070,485 | 15,320,750 | 67,530,859 |
| வாடகை | 57,601,492 | 35,582,446 | 93,183,938 | 24,738,254 | 26,698,197 | 41,585,486 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 782,500 | 13,670,580 | 14,453,080 | 13,655,580 | 15,000 | 782,500 |
| நீர்க் கட்டணம் | 25,023,319 | 37,160,811 | 62,184,130 | 22,574,573 | 13,315,373 | 26,294,183 |

### 2.3.2 வீத வரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 237(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஒரு சொத்தின் பெறுமதி மதிப்பீட்டின் பின்னர் அச்சொத்தின் பெறுமதியினை தாக்கக் கூடிய விதமான அனைத்து பௌதீக ரீதியான மாற்றங்கள் செய்யும் சந்தர்ப்பங்களில் மா நகர சபை அதற்காக புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து வரும் மாதத்தின் முதலாம் திகதி முதல் செயற்படுவிதமாக அறவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், மா நகர சபை 2001 ஆண்டின் பின் 07 வருடங்களை விட மிகையான காலத்தில் செய்யப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக வீத வரியினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி பாரிய அளவிலான 05 நிர்மாண வேலைகள் இணக்கச் சான்றிதழ் இன்றி செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்த போதிலும், நிர்மாணிப்பதற்கு முன்னர் காணப்பட்ட தரையின் பெறுமதியின் மீது மிகவும் சிறிய அளவு தொகை வீத வரி ஒன்று அறவிடப்பட்டுக் காணப்பட்டது.

(இ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252(3) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தினை பதிவழிப்பதற்காக அத்தொகை கவனம் செலுத்தத் தேவையில்லாத அளவு அல்லது அதனை செலுத்தும் நபரின் ஏழ்மையின் காரணம் ஏதேனும் வீத வரியினை முற்றாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட முடியும். எனினும் நுவரஎலிய ஹோட்டல் ஒன்றின் ரூபா 73,320 தொகையான எழுத்தாணைக் கட்டண வருமானத்தை பரிசோதகரின் விதப்புரை மற்றும் கணக்காளரின் 2010 பெப்ரவரி 24 ஆந் திகதி அங்கீகாரத்தின் பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலுவை வீத வரியினை அறவீடு செய்வதற்காக மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 242 ஆம் உப பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீர்க் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் பதிவேடுகளின் பிரகாரம் 2007 ஆண்டு முதல் 2015 வரையான காலப் பகுதியில் 187 நீர் வழங்கள் சேவைகள் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நீர் நுகர்வோர்களிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,516,535 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் அந்த நுகர்வோர்கள் அங்கீகாரம் இன்றி நீர்தொடர்புகள் பெற்றுள்ளார்களா என தொடர்செயல் நடவடிக்கை செய்திருக்கவில்லை.

(ii) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 26,294,183 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொகையினை அறவீடு செய்வதற்காக மா நகர சபையின் துணை விதியில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாகனத் தரிப்பிடக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்வதற்காக துணை விதிகள் ஆக்கப்படாமல் கட்டணம் அறவிடப்பட்டுக் காணப்பட்டது.

(ii) வாகனங்களை நிறுத்தி வைத்தலுக்கான கட்டணம் அறவீடு செய்வதற்காக 13 ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக சீருடை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கட்டண அறவீட்டு விடயங்கள் தொடர்பான மேற்பார்வை பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

**2.3.5 கிரகரி துவிச்சக்கர வண்டிச் செயற்திட்டங்கள்**

கிரகரி பூந்தோட்டத்தில் நடத்தப்பட்டுவந்த துவிச்சக்கர வண்டிகளை வாடகைக்கு வழங்கும் செயற்திட்டம் தொடர்பாக சபையினால் கடினமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டமையினால் இவ்வாண்டின் போது செயற்படுத்த முடியாதிருந்ததால் சபை ரூபா 5 மில்லியனை விட மிகையான வருமானம் ஒன்றினை இழந்திருந்து.

**2.3.6 காணிக் குத்தகையை பதிவழித்தல்**

விளையாட்டுக் கழகமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கியிருந்த 29 ஏக்கர் 01 ரூட் 16.2 பர்சஸ் காணி தொடர்பாக 1991 முதல் 2009 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 3,906,000 தொகையான காணி குத்தகைத் தொகையின் பதிவழிப்பதற்காக 2015 அக்தோபர் 08 திகதி விஷேட நிதி மற்றும் நிலையான குழுக் கூட்டத்தின் 04 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் அமைச்சரின் அங்கீகாரத்தை பெறுவதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்தது. மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 266 இற்கு முரணாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

**2.3.7 ஏனைய வருமானங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இறைச்சிக் கடை, ஞாயிறு சந்தையின் மீன் பலகை, சிற்றுண்டிச்சாலை, பொது மலகூடம் மற்றும் திண்மக் கழிவுப் பொருள் மீள்சுழற்சி மத்திய நிலையம் என்பவற்றை நடத்துவதற்காக குறைந்த விலைகூறலை தீர்மானித்திருந்த போதிலும் கூறுவிலை கோரப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் அந்த விலைகூறல் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த கோவையின் படி 05 சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட உடன்படிக்கைகளில் சபை சார்பாக எவரும் என்பன கையொப்பமிட்டிருக்கவில்லை.

**2.3.8 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 758,748 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 16,636,323 தொகை பெறவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை மதிப்பீடு**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகை காட்டும் முன்னேற்ற அறிக்கை மற்றும் நிருவாக அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் பயன்பாட்டுக்காக ரூபா 1,054,440 தொகை பெறுமதியான Sound System and Conference System கொள்வனவு செய்யும் போது அரச பெறுகைகள் நடைமுறை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மா நகர சபைக்குச் சொந்தமான 06 ஏக்கர் 01 ரூட் 15 பர்சஸ் காணி ஒன்று தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்காக 33 வருட காலத்திற்காக 1982 ஜுன் 31 திகதி குத்தகைகக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் அக் குத்தகைக் காலம் 2015 ஜுலை 31 திகதியுடன் முடிவடைந்திருந்தது. அவ்வாறாயினும் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட ஆதனங்களை சபைக்கு உரித்தாக்குவதற்கு அல்லது புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் புதிய ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்வதற்கு 2016 மார்ச் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 களஞ்சியக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொள்வனவு செய்யப்பட்ட இருப்புக்கள் களஞ்சியத்திற்கு கிடைத்த பின்னர் பண்ட பெறுகைச் சிட்டை (GRN) களில் இருப்புப் பதிவேட்டின் பக்க இலக்கம் குறிப்பிடப்படாமையால் 06 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்திருந்த ரூபா 536,446 தொகை இருப்புப் பதிவேடுகளில் பதியப்பட்டதற்கான உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) 08 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்திருந்த ரூபா 546,561 தொகை பெறுமதியான இருப்புக்கள் இருப்புப் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(இ) மா நகர சபையின் தாய்மார் பிணிஆய்வு நிலையத்திற்காக சுகாதாரத் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த 178,000 இரும்பு போலேட் மருந்து மாத்திரைகள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தக் கூடிய காலம் முடிவடைந்திருந்தது.

(ஈ) 2015 பண்டக் கணிப்பீட்டின் போது 143 வகையான பண்டங்களைச் சேர்ந்த 325 விடயங்களில் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 103 மற்றும் 104 இன் பிரகாரம் பொறுப்புச் கூற வேண்டியவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபையின் சில பிரிவுகளில் அலுவலகப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களில் மிகையொன்று காணப்பட்ட

போதிலும் அவற்றை பதிவேடுகளில் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஜுலை 08 ஆந் திகதி ரூபா 3,135,510 பெறுமதியான 64 டயர்கள் அரச பெறுகைகள் நடைமுறைக்கு முரணாக 03 கூறுவிலைகள் மாத்திரம் கோரப்பட்டு பெறப்பட்டிருந்தது. அவ்வாறு பெறப்பட்ட கூறுவிலைகளை கணக்காய்வின் போது சந்தையில் பெற்ற கூறுவிலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 959,482 தொகையினை சபை மிகையாகச் செலுத்தியிருந்தது.

### 3.5 தாமதமான செயற்திட்டங்கள்

கோல்ப் வீவ் வர்த்தக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக வரைபு மற்றும் மதிப்பீடுகளுக்காக உசாத்துணை கம்பனி ஒன்றிற்கு ரூபா 3,000,000 செலுத்தப்பட்டு 09 வருட காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அதன் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் 17 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையும் 05 செலவு விடயங்களில் 10 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பெறுகைகள் திட்டம்

கொள்வனவுகள் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் மற்றும் 02 வகையான சொத்துக்கள் என்பன 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) 2011 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 448,500 தொகை பெறுமதியான 230 மழை மேலங்கிகள் மற்றும் அதே ஆண்டில் கிரகரி குளத்தை அலங்கரிப்பதற்காக பெற்றிருந்த ரூபா 744,750 தொகை பெறுமதியான 135 மின்குமிழ்கள் என்பன எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

**(ஆ) வெளிசாராருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

நிர்மாண வேலை களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 50,000 பெறுமதியான 14'x8' அளவிளான ''செப்ரிக்'' வகையான நீர்தொட்டி ஒன்று நுவரஎலிய தேர்தல்கள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக வழங்கள் கட்டளை ஒன்று இன்மையால் ஏடுகளில் மீதியொன்றென காட்டப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு